சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி

அசல் வழக்கு எண்.173/2022

**DW1 சிவக்குமார்** **03.02.2026**

<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் என்ன படித்துள்ளேன் என கேட்டால் பிஏ எக்கனாம்பிக் படித்துள்ளேன் நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என கேட்டால் மளிகை கடை வைத்து நடத்தி வருகிறேன் 1ம் பிரதிவாதி எனது மனைவி என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியின் தாவா சொத்தின் உரிமையாளர் என்றால் சரிதான். இந்த வழக்கில் நான் 2 ம் பிரதிவாதி என்று சொன்னால் சரிதான். 1ம் பிரதிவாதி எனக்கு பவர் பத்திரம் எழுதி கொடுத்துள்ளாரா என்றால் இல்லை. 1ம் பிரதிவாதிக்கு சாட்சியம் அளிக்க நீதிமன்ற அனுமதி பெற்றுள்ளேனா என்றால் இல்லை. 1ம் பிரதிவாதி நீதிமன்றத்திற்கு வந்து சாட்சியம் அளிக்கவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தை பற்றி எனக்கு அனைத்து விவரங்களும் தெரிய வாய்ப்பில்லை என்று சொன்னால் அது சரியல்ல, எனக்கு சொத்தை பொருத்து அனைத்து விவரங்களும் தெரியும். வாதி அவருக்கு வரவேண்டிய தொகையை கோரி தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் சரிதான், ஆனால் அது சரியான பரிகாரம் அல்ல. 20.01.2021 தேதியன்று வாதியும் நானும் எனது மனைவியும் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டோம் என்றால் சரிதான். அந்த ஒப்பந்தம் கட்டுமான ஒப்பந்தம் என்றால் சரிதான். அந்த ஒப்பந்தத்தில் 1ம் பிரதிவாதியின் கையெழுத்து உள்ளது

என்றால் சரிதான். அதில் உள்ள சரத்துக்கள் விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் தான் வாதி கட்டுமான பணியை தொடங்கினார் என்றால் சரிதான். அந்த கட்டுமான பணி தொடர்ச்சியாக 2 மாதம் நடந்தது என்று சொன்னால் சரிதான், பின்னிட்டு 4 மாதம் பணி நடக்கவே இல்லை. தற்போது தாவா சொத்தில் வணிக கட்டிடம் தான் உள்ளது என்றால் சரிதான். கட்டிட வேலை தொடங்குவதற்கு முன்பு வணிக கட்டிடம் இல்லை என்றால் சரிதான், நான் தான் கட்டிடத்தை கட்டி சொந்தமாக தொழில் செய்து வருகிறேன். அந்த கட்டிட ஒப்பந்தத்தில் செலவு தொகை குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதியும் நானும், 1ம் பிரதிவாதியும் கட்டிட வரைபடத்தில் கண்டவாறு தான் கட்டுமானம் ஆரம்பிக்கப்பட்டது என்றால் சரிதான். எனது கட்டிடத்தின் பக்கத்து கட்டிடத்தின் உரிமையாளர் யார் என தெரியுமா என்றால் அதற்கடுத்து சோழா மெஸ் ஒன்று உள்ளது. பக்கத்து கட்டிடம் எந்த திசை பார்த்து உள்ளது என கேட்டால் மேற்கு பார்த்து உள்ளது. எங்களது கட்டிடத்திற்கு மேற்கு பக்கம் காலியாக உள்ளது. அந்த காலியாக உள்ள இடத்தின் உரிமையாளர் யார் என கேட்டால் எனக்கு தெரியாது. அந்த காலியிடத்தின் உரிமையாளருக்கும் எனக்கும் நில அளவை பொறுத்து பிரச்சனை உள்ளது என்று சொன்னால் அது சரியல்ல. எனது கட்டிடம் எத்தனை சதுரடியில் கட்டப்பட்டுள்ளது என்று சொன்னால் 1,180 சதுரடி அடியில் கட்டப்பட்டுள்ளது, அதற்கான ஆதாரம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, ஆனால் கிரய ஒப்பந்தத்தை தாக்கல் செய்துள்ளேன். எனது

ஏரியாவின் கிராம நிர்வாக அலுலவரின் பெயர் என்னவென்று கேட்டால் எனக்கு தெரியாது. அந்த கிராம நிர்வாக அலுவலர் தான் பக்கத்து இடத்து பிரச்சனையை தீர்த்து வைத்தார் என்று சொன்னால் பக்கத்து இடத்தில் பிரச்சனையே இல்லை. இந்த வழக்கில் நீதிமன்ற ஆணையர் வேண்டி மனு தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. எனது கட்டிடத்தின் எவ்வளவு பகுதி இடிக்கப்பட்டுள்ளது என்று கேட்டால் எந்த பகுதியும் இடிக்கப்படவில்லை. முன்பு கட்டிய கட்டிடம் இடிக்கப்பட்டது என்று சொன்னால் அது சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வாசாஆ 3 ல் உள்ள கட்டிடம் எனது கட்டிடம் என்று சொன்னால் அது சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வாசாஆ 3 புகைப்படம் கட்டும் போதும் இடித்த போதும் எடுத்த புகைப்படம் என்று சொன்னால் அது சரியல்ல. எனக்கும் வாதிக்கும் என்ன பிரச்சனை என கேட்டால் 2 மாதம் கட்டிடம் வேலை செய்தவர் பின்பு வரவேயில்லை அதனால் பொருட்களை கொண்டு வந்துவிட்டேன் என்று கூறி எங்கள் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார். எங்களது தரப்பில் வாதியின் மீது காவல் துறையில் புகார் கொடுத்தோமா என்றால் இல்லை அவர் தான் எங்கள் மீது புகார் கொடுத்தார். பொருட்களை எடுத்து சென்று விடுவோம் என்று வாதி கூறியதால் 2 வாதாக நாங்கள் புகார் கொடுத்தோம். வாதிக்கு நான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை.

**(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது)**

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி

பொள்ளாச்சி